**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 46** **நாள்: 07.03.2025**

**தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தின் மாண்புமிகு தலைவர் திரு. மா. வெங்கடேசன் அவர்கள் தலைமையில் தூய்மைப் பணியாளர்கள் நலன் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தின் மாண்புமிகு தலைவர் திரு. மா. வெங்கடேசன் அவர்கள் தலைமையில் தூய்மைப் பணியாளர்கள் நலன் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் இன்று (07.03.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஒப்பந்ததாரரிடம் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களிடம் கலந்துரையாடி, அவர்களது கருத்துக்கள் கேட்கப்பட்டது. தூய்மைப் பணியாளர்கள் தங்கள் பணியின்போது கையுறை, காலணி, முகக்கவசம் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் பணியாற்றுதல், இதற்கான நடவடிக்கைகளை உரிய அலுவலர்கள் மேற்கொள்ளுதல், தூய்மைப் பணியாளர்களுக்கான ஊதியத்தினை முறையாகக் கணக்கிட்டு சரியாக வழங்குவதை உறுதி செய்தல் உள்ளிட்ட தூய்மைப் பணியாளர் நலன் தொடர்பாக தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தின் தலைவர் அறிவுறுத்தல் வழங்கிப் பேசினார். மேலும், இக்கூட்டத்தில் அனைத்து தொழில் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) திரு.வி.ஜெயசந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு) மற்றும் அலுவலர்கள், தொழில் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**